# அஷ்டவர்க்கத்தில் பரல்களே பலன்களை நிர்ணயிக்கும் காரணிகள்

வி உமா#1, Dr. கே. ஜோதிமணி*2

*[1]முழுநேர ஆய்வாளர், [2]ஆய்வு நெறியாளர் : இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,*

*[1,2]ஜோதிடவியல் துறை, விஸ்டாஸ், சென்னை, தமிழ்நாடு,*

*மின்னஞ்சல்:* vumaeduc@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் -** அஷ்டகவர்க்க கணிதம் சாதகப் பலனை மிகத் துல்லியமாக நிர்ணயிக்க உதவுகிறது. இதன் வாயிலாக லக்கினம் மற்றும் ஏழு கோள்கள் ஜாதகரின் வாழ்வில் ஏற்படுத்தும் விளைவுகளை தெளிவாக அறிய இயல்கிறது.

***திறவுச் சொற்கள் :*** *பந்துக்கள் - நல்ல பலன்கள் ரேகா - அசுப பலன்கள் ; போஷக பரல்கள் - செல்வம் வளம் அளிக்கும் குறிகாட்டுகள்*

## 1. முன்னுரை

அஷ்டக வர்க்கம் என்றால் எட்டு விதமான வர்க்கங்கள் என்று பொருள்படும். எட்டு விதமான கணிதங்கள் அமைத்து ஒரு சாதகத்தின் அனைத்து பாவக பலன்களையும் மற்றும் பாவக பலன் நிர்ணயிக்கும் காலத்தையும் துல்லியமாக கண்டறியலாம். மேலும், கோட்சாரப்படி கோள்கள் தரக்கூடிய பலன்களையும் மிகச் சரியாக அறிய முடியும்.

## 2. பலன் நிர்ணய கோட்பாடு

கோட்சாரத்தில் ஏழு கோள்களும் சஞ்சரிக்கும் போது ஏற்படும் தாக்கத்தை அஷ்டக வர்க்கம் கணிதம் வாயிலாக, அனைத்து கோள்களின் நல்ல பலன்களையும், தீய பலன்களையும் முழுவதுமாக கண்டறிய இயல்கிறது. ஜாதகத்தில் தீய யோகங்கள் இருந்தாலும், அஷ்டக வர்க்க பரல்களே ஒருவருக்கு கிடைக்கும் நல்ல அல்லது தீய பலன்களே நிர்ணயம் செய்கிறது .

## 3. கோள்களும் அவை ராசிக்கு இடும் பரல்களின் சூட்சுமங்களும்.

ராகு, கேது தவிர்த்து, பிற கோள்களான சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஏழு கோள்களுடன், லக்கினமும் சேர்ந்து எட்டு விதமான பலன்களை, ஒவ்வொரு ராசிக்கும் தருகின்றன. அஷ்டக வர்க்கத்தில் ராகு, கேது என்னும் நிழல் கோள்கள் இடம் பெறாது. அஷ்டக வர்க்க கணிதப்படி நல்ல பலன்களை பிந்துக்கள் அல்லது பரல்கள் (0) என்றும், அசுப பலன்களை தருவதற்கு ரேகா (I) என்றும் அழைக்கப்படுகிறது.

i. *பின்னாஷ்டக வர்க்கம்:* தனித்தனியே, ஒவ்வொரு கோள்களுக்கு கணக்கிடும் அஷ்டக வர்க்கம் முறை ஆகும்.
ii. *சர்வாஷ்டக வர்க்கம்:* பாவங்களில் ஏழு கோள்களும், லக்கினமும் கொடுக்கும் மொத்த பிந்துக்களைக் குறிக்கும் அட்டவணை.
iii. *பிரஸ்தார அஷ்டக வர்க்கம்:* ராசிகளுக்கு, கோள்கள் அளித்த பிந்துக்களின் மொத்த விபரங்களை அட்டவணை மூலம் தெரிந்து கொள்வது ஆகும்.
iv. *ரேகா சர்வாஷ்டக வர்க்கம்:* அஷ்டக வர்க்க கணிதத்தில் மொத்தம் 337 பிந்துக்கள் உள்ளன. இந்த 337 பிந்துக்களையும் ஏழு கோள்களுக்கும் சில குறிப்பிட்ட எண்ணிக்கை அளவுக்கு பிரித்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோளும், தான் நிற்க்கும் ஸ்தானம் முதல், சில குறிப்பிட்ட ஸ்தானங்களில் பிந்துக்கள் இருக்கின்றன. கோள்கள் ஒரு ராசியில் கொடுக்கும் சுப (பிந்துக்கள்) மற்றும் அசுப(ரேகா) பலன்களின் மொத்த கூட்டுத்தொகை 56 ஆகும். ஒரு ராசியில் ஒரு கோள் கொடுக்கும் சுப



DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133024

பரல்களை (பிந்துக்களை), மொத்த மதிப்பான 56 ல் இருந்து கழித்தால், அசுப பலன்கள் கொடுக்கும் பரல்கள் 32 என்றால், இதனை கழிக்க 24 ரேகா கிடைக்கும். கோள்கள் கொடுக்கும் சுப பலன்களை ஒவ்வொரு கோளுக்கும் தனித்தனியே கணக்கிட்டு, லக்கினத்திற்கும் கணக்கிட்டு பின்னாஷ்டக வர்க்கம் தயார் செய்யலாம்.

## 4. அஷ்டக வர்க்க வகைப்பாடுகள்

(i)சமுதாய அஷ்டக வர்க்கம் (ii)ஏகாதிபத்தியம், (iii) ராசி குணாகாரம் (iv) சுத்த பிண்டம், (v)திரிகோணம், (vi) குண சமூகம், (vii) கிரக குணாகாரம், (viii) ஏக சமூகம்.

### 4.1 ஒவ்வொரு கோள்களும் ராசிக்கு கொடுக்கும் மொத்த பிந்துக்கள்

சூரியன்-48, சந்திரன்-49, செவ்வாய்- 39, புதன்-56, குரு-56, சுக்கிரன்-52, சனி-39, மொத்தம் – 337 ஆகும். அஷ்டக வர்க்கச் சக்கரத்தை இரண்டு முறைகளில் அமைக்கலாம். ராசி சக்கரம் போல் அமைத்து கொண்டு கணக்கீடுவது பின்னாஷ்டக வர்க்கம் ஆகும். அட்டவணை போல் அமைத்துக் கொண்டு கணக்கீடுவது பிரஸ்தார அஷ்டக வர்க்கம் எனப்படும்.

### 4.2 அஷ்டக வர்க்க முறை கணித வகைப்பாடுகள் சிறப்புகள்

பின்னாஷ்டக வர்க்கம் என்றாலும் பிரஸ்தார அஷ்டக வர்க்கம் என்றாலும் இரண்டும் ஒன்றுதான். இருப்பினும், முறையாக அட்டவணை அமைத்துக் கணக்கிடுவதால், எந்தெந்த கோள், எந்தெந்த ராசியில், எத்தனை பரல்கள் கொடுத்துள்ளன என்பதை பிரஸ்தார அஷ்டக வர்க்கம் மூலம் தெளிவாக அறிய இயலும். எனவே அஷ்டக வர்க்கம் கணக்கிடும் போது பிரஸ்தார அஷ்டக வர்க்கம் முறை அட்டவணையைப் பயன்படுத்துவது சிறப்பு. எல்லா கோள்களுக்கும், அஷ்டக வர்க்கம் கணித்தப் பிறகு எல்லாச் சக்கரங்களையும் கூட்டி அமைக்கும் சக்கரம் சமுதாய அஷ்டக வர்க்கம் அல்லது சர்வாஷ்டக வர்க்கம் ஆகும்..

### 4.3 வான் மண்டலத்தில் கோள்களின் சஞ்சாரப்பலன்கள்

அஷ்டக வர்க்கத்தின் மூலம் கோள்களின் சஞ்சார பலன்களை அறிந்து கொள்ள இயலும். கோள்கள் வான் மண்டலத்தில் நகர்ந்து கொண்டிருக்கின்றன கோள்கள் ஒரு ராசியில் சஞ்சரிக்கும் காலம்.

சூரியன் – 1 மாதமும், சந்திரன்-2 ¼ நாட்களும், செவ்வாய்-45 நாட்களும், புதன் -28 நாட்களும், குரு-1 வருடமும், சுக்கிரன் – 30 நாட்களும், சனி – 2 ½ வருடங்களும், ராகு, கேது போன்ற கிரகங்கள் - 1 ½ வருடங்களும் எடுத்து கொள்கின்றன. கோள்கள் பிறப்பு சாதகத்தில் சாதகருக்கு தர வேண்டிய பலன்களையும் மீறி, கோட்சாரத்தில் அதிக அளவில் சுப அல்லது அசுப பலன்களை தர இயலாது.

### 4.4 கர்ம வினையின் பயனும் கோச்சார பலன்களும்:

ஒருவரது வாழ்க்கையில் முன் ஜென்ம கர்ம வினைகளுக்கு ஏற்றவாறு பிறப்பு சாதகத்தில் கோள்கள் அமையும். அதில் சாதகருக்கு அவரின் வாழ்வில் நடைபெறும் திசை, புக்திகளும் கணக்கிடப்படுகிறது. மேலும், கோள்கள் லக்கினத்தின் அடிப்படையில் பரல்கள் இடுவதில்லை ராசிக்கே பரல்கள் அளிக்கின்றன. கோள்கள் சில பாவங்களுக்கு பரல்களே தருவதில்லை. இதையே தெய்வ கொடுப்பினை என அறிய இயல்கிறது. தசா புக்திகள் குறிப்பிடும் பலன்கள் முதல் நிலை வகிக்கும். கோட்சார பலன்கள் இரண்டாம் நிலை ஆகும். எனவே சோதிடப் பலன்கள் கூறுவதற்கு, தசா புக்தி பலன்கள் முன்னுரிமை பெற்றவையாகவும் இரண்டாவதாக, கோட்சார பலன்கள் அஷ்டக வர்க்கப் பரல்களுடன் இணைத்து கணிக்கப்படும் நிலையில் உள்ளது.

### 4.5 பாரம்பரிய முறையில் கோட்சார - சுப -அசுப ஸ்தானங்கள்

அனைத்து கோள்களும், கோட்சாரத்தில் சந்திரன் நின்ற ராசிக்கு 11ம் இடத்தில் நற்பலன்களை


DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133024


வழங்குகிறது. சூரியன், ராகு, கேதுக்கள் சந்திரனுக்கு 3,6,10ம் இடங்களிலும், செவ்வாயும், சனியும் 3, 6 ம் இடங்களில் நற்பலன்களை தருகின்றன. சந்திரன் நின்ற ராசிக்கு கோட்சார சந்திரன் 1,3,6,7ம் இடங்களிலும், சுக்கிரன் 6,7,10ம் இடங்களைத் தவிர மற்ற 1,2,3,4,5,8,9,11ம் இடங்களிலும், குரு 2,5, 7,9 ம் இடங்களிலும் நற்பலன்கள் தரும். புதன் 2,4,6,8,10 ஆகிய வீடுகளில் நன்மை தரும்.

கோட்சாரத்தில் ஒரு கோள் சந்திரன் நின்ற ராசியிலிருந்து சஞ்சரிக்கும்போது சாதகருக்கு நன்மை, தீமைப் பலன்கள் ஏற்படக் காரணமாய் இருந்தாலும் மற்றொரு கோள், வேதை ஸ்தானத்தில் (தடை ஏற்படுத்தும் பாவம்), அமர்ந்தால், இந்தக் கோள் கொடுக்கும் நற்பலன்கள் ஜாதகருக்கு கிடைக்காது. உதாரணமாக: கோட்சாரத்தில் சந்திரன் நின்ற இடத்திற்கு 3ம் இடத்தில், சூரியன் சஞ்சாரம் செய்வது சாதகருக்கு நற்பலன்களைத் தரும். ஆனால் வேதை ஸ்தானமான 9ம் இடத்தில் வேறு ஒரு கோள் சஞ்சாரம் செய்தால், சாதகர் சூரியன் அளிக்கும் நற்பலன்களை அனுபவிக்க இயலாது.

**கோள்கள் நற்பலன்கள் தரும் இடங்களும் அதற்கு வேதை ஸ்தானங்களும்**

| | **சுப ஸ்தானங்கள்** | **வேதை ஸ்தானங்கள்** |
|---|---|---|
| **சூரியன்** | 3,6,10,11 | 4,5,9,12 |
| **சந்திரன்** | 1,3,6,7,10,11 | 2,4,5,8,9,12 |
| **செவ்வாய்** | 3,6,11 | 5,9,12 |
| **புதன்** | 2,4,6,8,10,11 | 1,3,5,8,9,12 |
| குரு | 2,5,7,9,11 | 3,4,8,10,12 |
| **சுக்கிரன்** | 1,2,3,4,5,8,9,11,12 | 1,3,5,6.,9,10 |
| சனி | 3,6,11 | 5,9,12 |
| ராகு , கேது | 3,6,10,11 | - |

மேற்கண்ட சுப, அசுப வேதைகள் அஷ்டக வர்க்க கணிதத்தில் இடம் பெறுவதில்லை. அஷ்டக வர்க்க கணிதத்தில் உச்சம், நீச்சம் ,நட்பு, பகை, அஸ்தமனம், வக்கிரம் போன்றவைகள் இடம் பெறுவதில்லை. பரல்கள் அடிப்படையிலே பலன்கள் நிர்ணயிக்கப்படுகிறது.




படம் 1: ராசி சக்கர கிரக நிலைகள்



படம் 2: ஜாதகம் விவரம்

### 4.6 சர்வாஷ்டக பரல்கள் கணக்கீடு (செவ்வாய், புதன், சனி )



படம் 3: சர்வாஷ்டக பரல்கள் கணக்கீடு

- *சனி பகவான்* தான் நின்ற வீடான மேஷ வீட்டிற்கு 5 பரல்களையும், 10ம் வீட்டிற்கு 4 பரல்களையும் தந்துள்ளார் .


DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133024

- *செவ்வாய்,* தான் நின்ற வீடான மிதுனத்தில் இருந்து 6ம் வீட்டிற்கு 5 பரல்களையும், 11ம் வீட்டிற்கு 6 பரல்களையும் என மிக அதிகமாகத் தந்துள்ளார்.
- *புதன்,* தான் நின்ற வீடான மிதுனத்தில் இருந்து 2ம் வீட்டிற்கு 6 பரல்களையும், 10ம் வீட்டிற்கு 5 பரல்களையும், 11ம் வீட்டிற்கு 6 பரல்களை தந்துள்ளார்.

அஷ்டக வர்க்கத்தில் பாவகங்களின் அடிப்படையில் ஒருவரின் வாழ்வு, செல்வ நிலை, மற்றும் குணாதிசியங்களைக் கண்டறிய இயலும். மேற்கண்ட ஜாதகரின் சர்வாஷ்டக அட்டவணையில், அவர் பெற்றுள்ள பரல்களின் அடிப்படையில் செல்வ நிலையைக் காணலாம்.




படம் 3: செல்வ நிலையில் உள்ள கட்டம்

1,5,9 பந்தூக பாவக பரல்கள் கூட்டுத் தொகை (26+28+27)=81,

சேவக பாவகமான 2,6,10ம் பாவக பரல்கள் கூட்டுத் தொகை (26+33+29)=92,

போஷக பாவகமான 3,7,11ம் பாவக பரல்கள் கூட்டுத் தொகை (35+40+32)=97,

காதக பாவகமான 4,8,12 பரல்கள் கூட்டுத் தொகை = (29+19+19)=67 கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் , இந்த சாதகர், *போஷக பாவகத்தில்,* மிக அதிகமாக 97 பரல்களைப் பெற்றுள்ளதால், இவர் மிகப் பெரிய செல்வந்தர் என அறிய இயல்கிறது.

மேலும் காதக பாவக கூட்டுத்தொகை 63 பரல்களாக உள்ளதால், ஜாதகருக்கு மகிழ்ச்சி நிலைத்து, கடன் மற்றும் எதிரிகளால் தொல்லை இல்லை என அறியலாம்.

பாரம்பரிய முறை ஜாதக பலன்கள் அடிப்படையில் , சந்திரன், புதன், , சுக்கிரன் ஆகிய சுப கிரகங்கள் வக்கிரம் அடைந்தாலும், செவ்வாய் வக்கிரம் அடைந்தாலும் ஜாதகரின் அஷ்டக வர்க்க கணிதத்தின் அடிப்படையில் அவர் செல்வ வளம் மிக்கவராகவும், வழக்கறிஞர் தொழிலில் முன்னேறி உள்ளார் என புரிந்து கொள்ள இயல்கிறது.

## 5. முடிவுரை

ராசிகளில், கோள்கள் பெற்ற பரல்கள் அடிப்படையிலேயே, ஒருவரின் வாழ்க்கை நிலை அஷ்டக வர்க்க முறையில் கணிக்கப் படுகிறது. எனவே, கோள்கள் பெற்ற நக்ஷத்திர சாரம், பகை, நட்பு, அஸ்தமனம், வக்கிரம் போன்றவற்றை அஷ்டகவர்க்கத்தில் எடுத்து கொள்ளப்பட மாட்டாது என்பது தெள்ள தெளிவாகிறது. மேலும் ஒரு கோள் அஸ்தங்கம் அடைந்தாலும், வக்கிரம் பெற்றாலும் பரல்கள் நன்றாக அமைய பெற்றால் ஒருவரின் வாழ்வு மங்காத புகழுடன் வாழ் நாள் சாதனையாளர் என கண்டறிய இயலும் என்பதில் ஐயமில்லை

### பார்வை நூல்கள்

[1] மகரிஷிகளின் ஜோதிட சூட்சுமங்கள் - சித்த யோகி சிவதாசன் - அரோமீரா பதிப்பகம் - 2012

[2] அஷ்டவர்க்க கணிதமும் பலன்களும் – மு மாதேஸ்வரன் -விஜயா பதிப்பகம், கோவை (Year not available).

[3] அஷ்டவர்க்கம் - எம். என்.ராஜன் - சகுந்தலா நிலையம் -2017

[4] அஷ்டவர்க்கம் - நடேசன் சாஸ்திரிகள் - கடலங்குடி பதிப்பகம் (Year not available).

[5] வலைதள புத்தகங்கள் - ஆங்கிலம் மொழி தமிழாக்கம் (Year not available).



DOI: 10.30726/ijlca/v13.i3.2026.133024